பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில MADRAS குருகுலத் தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை--6 குருகுலம், மாம்பாக்கம்; செய. புரட்டாசி, கரு 1—10—54 தளிர் 50

## கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை மதிப்'வர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண் குளிர்ந் தனவே"

(திருவிசைப்பா)

பச்சைக் குழந்தை வாய்ச்சுவை யொன்றுதான் அறியவல்லது. அது நல்ல இசையினையோ, நல்ல ஓவியத்தையோ ஆழ்ந்து அனுபவிக்க இயலாதது. மக்கள் வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை, தொடர்ந்து நிற்பது வாய்ச்சுவை ஒன்றுதான். இச் சுவையோடு கூடிய பொருள்தான் ஆன்மாவின் கோயிலாம் உடலை வளர்ப்பது. இந்நுண்மை நோக்கியேதான் வள்ளுவனாரும் "சுவையொளி யூறோசை நாற்றம்" என முதற்கண் சுவை தனை எடுத்தாண்டார் போலும்.

வாய்ச்சுவைக்குரிய பொருள்களில் சிறப்புடையது இனிய செவ்விய கனியன்றோ! இறைவன் செம்மேனி யெம்மானல்லவா? பழுத்துச் செக்கச் சிவந்து ரசந்ததும்பி யிருக்கும் ஒரு கனியைப் போன்றுளான் என இறைவனைக் கூறியது எத்தனைக் கவிநயம். இக் கனி இப் பூமியில் அழுக்கு மண்ணில் வளர்ந்த மரத்தினதா? இல்லை. விண்ணுலகக் கற்பக விருட்சக் கனி. எனவே, விண்ணாடுள வந்ததொரு மெல்லமுத மனையது. விரும்பிய அனைத்துங் கொடுக்கவல்லது; தோல் முதலியன சீவி உண்ணவேண்டுவதா? அன்று இருக்கின்றபடியே விழுங்கக் கூடியது; ஒருமுறை விழுங்கி அமையக் கூடியதா? இல்லை இல்லை பருகியும் ஆராது விழுங்கியும் ஒல்லகில்லாதது. விழுங்கிய வண்ணமாக யிருக்கும்படிச் செய்வதே இத் தெய்வச் செழுங் கனியின் திறம். யாவருஞ் சுவைத்து அனுபவிக்கும் சாதாரணக் கனியா? அன்று கற்றவர்கள் மட்டும் சுவைத்துச் சுவைத்து இன்புறக் கூடிய சிவமணங் கமழும் தெய்வ நறுங்கனி.

நினைக்குந்தோறும் இனிக்கும் திருநாமத்தை யுடையானை, நச்சுவார்க்கினியானை, சுவைத்து விழுங்கி யமையாத இனிய செழுங் கனிக்கு ஒப்புக் கூறுதல் ஆ! எவ்வளவு இன்பம் தருகின்றது. நாமும் நாடோறும் இனியனும் இறைவனின் திருநாமத்தைச் சுவைத்துச் சுவைத்து இன்பமெய்துவோமாக!

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**

*(23-10-53 முதல்)*

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | செய, புரட்டாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 1-10-54 வெள்ளி. | 50 |


# வாழ்க்கை யுண்மை

வாழ்க்கை வாழ்வதற்கே. அது அரசியல், பொருளியல், கலையியல் எனப் பல்வேறு துறைகளையுடையது ஒவ்வொன்றிலும் பல பிரிவுகள். வாழ்வின் எல்லாத் துறைகளையும் அடக்கி நிற்பது சமயம். அது புறத்திலுள்ள நலங்கள் எல்லாவற்றையும் அகத்தில் சேர்ப்பது. சேர்க்க வழி செய்வது. இந்நாட்டவர்கள் கண்ட சமயம் இத்தகையதே.

நிற்க, இந்நாட்டுச் சமயம், பண்டைக் காலத்தில் சமயம் என்று ஒரு தனிப்பேரால் வழங்கப்படவில்லை. வாழ்வோடு ஒன்று கலந்து பழக்க வழக்கமாக, பண்பாடாகவே இருந்து வந்தது. பிற்காலத்தில் வெளிநாட்டவர் இங்கே வந்து தத்தம் சமயங்களையும், மொழி, அரசு முதலியவைகளையும் நிலைப்பிக்கச் செய்த முயற்சிகளால் இந்நாட்டவரும் தம் கொள்கைகளை எல்லாம் சமயப் பேரால் திரட்டி வழங்கிப் பாதுகாக்க நேர்ந்தது. அது முதல் கொள்கைகள் மேல் மேல் தெளிவும் உறுதியும் விளக்கமும் பெற்றன. ஆனாலும் அவைகள் வாழ்க்கையில் அவ்வளவாக ஒன்றிவரவில்லை. பாமரமக்களுக்குப்பலர் புராணங்கள் எழுதத் தொடங்கினர். என்றாலும் தம் சமயக் கொள்கைகளுக்கு முரண்படாத கதைகளையே இவர்கள் புராணங்களாக்கினர்கள். நாட்டில் வேற்றவர் ஆட்சியும் பிறவும் நிலைக்கத் தொடங்கியதால் அத் துறையிலும் தவறுகள் பல்வேறு சேர்ந்துவிட்டன.

உண்மையில் வாழ்வியல்வேறு, சமயம் வேறல்ல. ஆகவே, வாழ்க்கையில் ஒவ்வொரு கூறாகிய அரசியல், கலையியல், பொருளியல் துறைகளில் தொண்டாற்றுவதைவிட சமயத் துறையில் தொண்டாற்றுவது முழுநல வாழ்க்கைத் தொண்டாகும்.

இனி, எதிலும் போலி உண்டு சமயத்திலும் அது நுழைந்திருப்பது இயல்பே. வீரமும் உண்மைத் தொண்டுணர்ச்சியும் கொண்டு அதனை விலக்கச் சமயத் துறையிலும் வேலை செய்ய வேண்டும். வாழ்வியலுக்கு மாறான, இம்மை நலத்தையும் இழக்கச் செய்கின்ற, மறுமை விளைவுகளை அறிவியலுக்கு ஒத்து விளக்க முடியாத கொள்கைகள் எந்தச் சமயத்தில் காணப்படினும் அதனை விலக்கவேண்டியது தான். ஒத்த கொள்கைகளை உண்மைக் கருத்துக்களை, சிறந்த வாழ்க்கைப் பாதையை வகுத்துக் காட்டும் எந்தச் சமயத்தையும் போற்றிக் கொள்ளவும் தயங்கக் கூடாது.

இவ்வகையில் உண்மைகளை அறியும் வேட்கையும், வாய்மை தவறாத நேர்மையும் மெய்த் தொண்டுணர்ச்சியும் உள்ள வீர இளைஞர்கள் மிகுதியாக வேண்டும்.

பழமையும் புதுமையும் இயல்பாகவே மக்கள் வாழ்வில் முறையே நழுவவும் இடங்கொள்ளவும் செய்யும்

ஆக்க நோக்கமும், எதிரது தழூஉம் நுட்ப உணர்வும் கொண்டு ஆராய்ந்து பழமைகளில் சிலவற்றை நாமே கழிக்கவும், புதியவைகளில் சிலவற்றை நாமே கொள்ளவும் முயல்வது கூட நல்லதுதான். ஆனால் தனித்தும், தக்கவர்களோடும், எண்ணித் துணிதல் வேண்டும், முடிவுகளைச் செய்வதில் தீவிரமே கூடாது ஏற்றவற்றைக் கொள்வதில் தீவிரம் கட்டாயம் வேண்டும். அப்போது தள்ளவேண்டியவைகள் தாமே விலகும்.

இக் கருத்துக்களை மனத்துட்கொண்டு இந் நாட்டின் பழம் பெருந் தெய்வ நெறியான சைவ சமயத்தை ஆராய வேண்டும். அது பற்றிய விளக்கங்களைத் தக்க அறிஞர்களை அணுகிக் கேட்க வேண்டும்

சிவ நெறி முடிபுகள் பண்டைத் தமிழ் நூல் முடிவுகளோடு முற்றாக ஒத்துப் போவதையும், மற்றைய நெறிகள் அவற்றில் சிலவற்றிற்கு முரண்பட்டுச் செல்வதையும் தமிழன்பர்கள் நுணுகிப் பார்த்தல் வேண்டும் செந்தமிழும் சிவநெறியும் தலைவியும்

தலைவனும் போல இணைந்து ஒன்றை ஒன்று பிரிப்பதாய் இந்நாட்டு மக்களுக்குத் தாயும் தந்தையும் போல இருந்து வருவதை உணரவேண்டும்.

இனி, வைணவம் எனப்படும் திருமால் நெறி சிவ நெறியோடு இணைந்தே இருந்து மிகப் பிற்பட்ட காலத்திலேயே தனியாகப் பிரிந்த தென்பதையும், திருமண் முதலிய அவர்களின் திருவடையாளங்கள் கூடப் பிற்காலத்தில், இராமாநுஜர் காலத்தில்தான் உண்டாக்கப் பட்டதென்பதையும், அதன் கொள்கைகளும் பிறவும் தமிழ்க் கொள்கைகளோடு பெரும்பாலும் ஒத்தனவே என்பதையும் அன்பர்கள் தெரிந்தேயிருக்கின்றனர்.

தனியே பிரிந்து, இராமாயண பாரத முதலிய இதிகாசங்களையும், அதில் வரும் தேவ நிலையிலுள்ள திருமாலின் திருவிளையாடல்களையும், முழுமுதல் தெய்வத்துக்கு முன்பு வழங்கிய 'திருமால்' என்னும் பெயரோடு தொடர்பு படுத்தியதில் தெளிவு கொள்ளாத காரணத்தால் வைணவம் சைவத்தின் வேறுபட்ட, ஏன் மாறுபட்ட சமயம் போல மக்கள் உணர்ந்துவிட்டனர். ஆயினும் வைணவம், சைவத்துள் அடங்கியதே. அதற்குச், சிவாலயங்களில் இன்றும் இடமுண்டு, இருக்கிறது என்பதையும் அறிய வேண்டும்.

சைவம் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் அடிப்படைக் கொள்கையை யுடையது. அதன் உயர்ந்த இக் கொள்கையைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டிப் பரப்பியவர்கள் நால்வர் பெருமக்கள். மறந்தும் அவர்கள் வேறொன்றைத் தெய்வமென்று பாடவில்லை. சைவத்திலேயே தனித்தெய்வங்கள்போலவைத்து வழிபடப்படும் பிள்ளையார், முருகன், அம்மை பற்றிக் கூட அவர்கள் பெருமைகளைக் கூறி அவர்களைப் பிள்ளையாகவும் மனைவியாகவும் பெற்றிருக்கிற சிவபிரான் என்பது போலத்தான் பாடி முடிப்பார்கள். இது அவர்கள் காட்டிய ஒரு நெறி; திரு நெறி என்று தெளிய வேண்டும்.

இவற்றையெல்லாம் ஓரளவு இது கொண்டே தெளிந்தாலும், இனித் தக்க தமிழறிஞர்களைக் கொண்டும் தெளிவோம் என்று தோன்றினும் உடனடியாகக் கீழ்க் கண்டவை போன்ற கேள்விகளைக் கேட்க என் போன்ற தமிழிளைஞர்கள் உள்ளம் துடிக்கும்.

'ஒருவனே தேவன்' என்று சொல்லிப் பிள்ளையார், முருகன், அம்மை எனத் தனித் தனியே தெய்வங்களை வைத்து வழிபடுவது ஏன்? ஏன் ஒவ்வொன்றிலும் பற்பல வடிவங்கள்? சைவம் தமிழ்ச் சமயம் எனத் தருக்கோடு கூறிக் கொண்டு அதே சமயத்தில் கோயில்களில் தமிழல்லாத வேற்று மொழியில் பூசை முதலிய சடங்குகளை அனுமதிப்பது ஏன்? சங்க நூல்களுக்கும் சைவத்துக்கும் உள்ள தொடர்பு என்ன? தமிழுக்குச் சைவ சமயத்தில் கொடுக்கப்பட வேண்டிய உரிமை இடம் எது? திருக் கோயில்களின் அமைப்பு முறைகளும் அங்கே பெருஞ் செலவில் நடைபெறும் குடமுழுக்கு, மாதாந்தரப் பெருவிழா, ஆண்டுப் பெருவிழா முதலியவைகளும் வாழ்க்கைக்கு எவ்வகையில் நலஞ் செய்கின்றன? என்றெல்லாம் வரிசையாய்க் கேள்விகள் எழும்.

எல்லாவற்றிற்கும் எளிதாக விடை சொல்லி அமைதி செய்துவிட முடியாது. அதற்குக் கேட்பவருக்கும் ஓரளவு சமய நூல் அறிவு வேண்டும், விடைதருபவருக்கும் அதற்கு வேண்டிய பொறுமை, தெளிவு, அன்பு, இரக்கம் முதலிய பண்புகள் இருக்கவேண்டும்.

என்றாலும், இத்தகைய கேள்விகளைக் கேட்கும் மெய்யன்பர்களே, உண்மையறியும் வேட்கையுடைய நல்லவர்களே யெல்லாம் அன்பு கூர்ந்து எங்கள் குருகுலத்தின் விரிவுரைகளை எல்லாம் தொடர்ந்து கேளுங்கள்! 'அவ் விரிவுரைகள் எங்கே நடக்கின்றன? அங்குள்ள சூழ்நிலைகள் நமக்குப் பிடிக்குமா?' என்றெல்லாம் கருதாதீர்கள்! பொறுமையாக வந்து கருத்துக்களை மட்டும் வாங்குங்கள்! எண்ணிப் பாருங்கள்! ஏற்படும் ஐயங்களைத் தனியாகக் கண்டு கேளுங்கள்! விருப்பமும் வசதியும் இருந்தால் தனித்தனி விரிவுரைகளையே நீங்கள் விரும்பும் தலைப்புகளில், இடங்களில் ஏற்பாடு செய்து கேளுங்கள்! பலரும் கேட்கச் செய்யுங்கள்! இனி 11-9-54 முதல் சனிக்கிழமைதோறும் காலை 5 மணிக்கு மேல் குருகுலத்தார் சென்னையிலுள்ள பல பேட்டைகளுக்கும் சென்று சொற்பொழிவுகளும் ஆற்றுகிறார்கள். ஆகவே, அவற்றிற்குத் தொடர்ந்து வாருங்கள்! என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

—ந. ரா. ஆடலரசு.

# உண்மைத் தொண்டர்

'மூர்த்தி'

இறைவனைப் பற்றிய எண்ணமும், பேச்சும் மக்கள் இனத்திலேதான் சிறப்பாக உண்டு. மக்கள் இனத்தில் நிறத்தாலும், வாழும் நிலத்தன்மையாலும் பற்பல வேற்றுமைகள் காணப்படுகின்றன. கடந்த முப்பது ஆண்டுகளுக்குள் எத்தனைப் போர்கள், பிரளயங்கள், அம்மம்ம! நெஞ்சு திடுக்கிடும் நிலையில் அனைத்தையும் பார்த்துவிட்டோம். எங்கும், எல்லாம், எவ்வாறோ இனந் தெரியா நிலையில் பெருங்குழப்பம். இக்குழப்பத்தில் சிக்குண்டு அலையும் உலகம் வாடி வதங்கிப்போவது அறியாமல் சுழல்கின்றது.

இத்தகைய குழப்பமான நிலையில் வாழ்க்கை நடத்தும் மக்கட்கு உள்ளத் தேறுதல் தரத்தக்க மருந்து உண்டா? நோயோ என்பைத் தொட்டுப் புரையோடி உடலை வாட்டுகிறது. தக்க மருந்து காணாமலே வாளாக் காலத்தைக் கடத்தி விட்டால் நாளை வரும் பின்னவர்கட்கு நாம் பதில் கூற வேண்டாமா? யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும் என்னும் காலம் சென்று விட்டது. மனிதன் பகுத்தறிவுடையவன் என்பதை மெய்ப்பிக்க ஏற்ற காலத்தை நழுவ விடாமல் செயலாற்ற இது நல்ல தருணம். கல்வி, கலை, விஞ்ஞானம், ஆராய்ச்சி, புதுமை முதலியவைகள் எல்லாம் அணி அணியாகப் புகுந்து உலகத்தைக் குழப்பிய தன்றி எழும்பியதில்லையே. எழும்பும் உணர்ச்சியைப் புத்தகங்களைப் புரட்டி ஏடுகளை எண்ணி அடைய இயலாது. அடைந்ததாக வரலாறும் இல்லை.

ஆயிரம் வாக்கியங்களை அடுக்கடுக்காக ஒப்பித்து உலகை மருட்டும் ஒரு வித்துவானைக் காட்டிலும் உண்மை உள்ளத்தால் உணர்ந்து தெளிந்த எழுத்தறிவில்லாதவனே சிறந்தவன்; உயிர்களின் உண்மை உள்நோக்கிய உணர்ச்சியால்தான் வெளியாக முடியும். வெளிப்பார்வை வாயிலாக அறியும் கோடானுகோடி விடயங்களைக் காட்டிலும் உள் நோக்கால் அறியும் ஒன்றே சாலச் சிறந்தது.

இவ்வாறு உள்ளத்தில் முளைத்து எழுந்து வளர்ந்து அவரவர் பக்குவத்திற்கேற்றவாறு பலன் தந்துகொண்டிருப்பதே சமயம் என்க. இதுவே வேதம் என்றும் கூறப்படுவது. வேதம் என்பது ஆன்றமைந்த பெரியோர்கள் உள்ளத்தை ஒடுக்கி அடக்கி ஆய்ந்த உண்மையின் பிழம்புதானே.

உலகில் பலகோடி மக்களுள்ளும் உள்நோக்குடையவர் ஒருவரே இருப்பர் இவர் தாம் காணும் உண்மையைத் தாமே அனுபவித்துப் பிறர்க்கு உதவாவிடில் இவர் பிறப்பால் உலகம் அடைந்த பயன் ஒன்றுமில்லை. ஞான யோக சித்தியால் தன்னுடைய ஆத்ம லாபத்தை எய்தும் ஞானி சிறந்தவனே எனினும் அதனைப் பிறர்க்காக்குவிக்கும் ஒருவனே அந்த ஞானியைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உயர்ந்தவனாவான்.

குழந்தையின் [illegible]மையைத் தாயைவிட [illegible] அறியான். மருந்தின் உண்மைப் பெருமையை மருத்துவனே அறிய முடியும். அதுபோல இறையின் (இன்ப அறிவுத்) தன்மையைத் தன்னை அவ்விறைவனுக்கு ஆட்படுத்திவிட்ட அடிமை (பக்தன்) ஒருவனே அறியஇயலும். விவசாயம், வணிகம், தையல், தோட்டம் போட எல்லாவற்றிற்கும் படிப்பும், பயிற்சியும் தேவை. இறையுணர்வுக்கு மட்டில் பயிற்சி தேவை இல்லையா?

கலைகளுள் கல்வியில், பயிற்சியில், தொழிலில், நிலையில் எல்லாவற்றிலும் தலையாயது இறையைப் பற்றிய முயற்சிதானே. இம்முயற்சியில் உள்ளம் ஊன்றாமல் வாழ்நாளை வீணாக்கின் அவன் பண்டிதனாயினும் பாமரனாயினும் செல்வனாயினும் ஏழையாயினும் ஒன்றே.

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமேல் சமய அறிவில் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் சமய அறிவினை எல்லாத் துறைகளிலும் செலுத்தி நாட்டின் நலங் காண முயலவேண்டும். சமயம் ஒரு மயக்க மருந்தில்லை மேல்விழுந்த மயக்கும் இருளை அகற்றி ஒளிபெறச் செய்யும் அமுதவாரி எனக் கருத்திலிருக்க வேண்டும்.

உலக மக்கள் எல்லார்க்கும் ஒரே சமயம் இருப்பின் மிக்க நலம், வம்பும் இல்லை என்று சிலர் கருதலாம், வினவலாம். உலகம் முழுக்க ஒரே மொழி வழங்க வேண்டும் என்பது எளிதில் இயலுவதா? இயலுமா? ஒரே இனமாக மக்கள் வாழ வேண்டும் என்று எண்ணல் முடியுமா? உயர்வு தாழ்வுப் பேச்சுக்கள், பேச்சோடு நில்லாமல் காரியத்தினுக்கு வரும்போதுதான் போர் முதலிய கொடுமைகள் எழுகின்றன.

இந்த எண்ணம் எழுச்சி எல்லாம் ஒழிய ஒரே ஒரு வழி உண்டு. அஃது யாது? சமயத்தின் உண்மை உலகம் எங்கும் நன்றாகத் தெளிவாகப் பரவ வேண்டும். காலம் மாறினும் மாறாத, என்றும் ஒன்றேயாகவுள்ள உண்மைத் தத்துவம் எல்லாச் சமயங்கட்கும் ஒன்றே என்ற தெளிவு வெளியாக வேண்டும் ஆழ்க தீயதெல்லாம் என்ற எண்ணம் உள்ள அறிவாளர் எல்லோரும் தத்தம் சமயத்தின் தத்துவங்களை நன்றாக அலசி ஆய்ந்து கொள்வதோடு, பிற சமயங்களின் போக்கையும் கோணல் அறிவு கொண்டு நோக்காமல் தெரிந்துகொள்ள வேண்டும் இவ்வாறு அறிந்த பெரியோர்கள் அறிவு, அருள், அன்பு செல்வங்களை உலகப் பொது மக்கட்கு ஓயாது வரையாது வாரிவழங்கும் பிறர்க்குரியராக முன்வரவேண்டும்.

உள்ளம், உடல் வாக்கு எனும் முத்திறத்திலும் தூய்மையை அணியாகக் கொண்ட நல்லோர் பலர், கேவலம் புகழ் தேடுவதை எண்ணாமல், பொருட் பெருங் குழியில் விழாமல் பிறர்க்கும் வாழவழி வகுத்து உதவ வேண்டும்; நாளை எங்கே உண்பது இருப்பது படுப்பது என்பதைக் கருதாமல் ஒற்றை யாடையே போர்வையாக உலகமெல்லாம் திரியத் துணிவு பூண்டு, இறையுணர்வு கலந்த சமயவாழ்வில் மக்கள் நலம் பல எய்தி இன்புற்று வாழ ஊர் தோறும், தெருக்கள் தோறும் பலவகைத் தொண்டின் மூலம் சிறக்கச் செய்தல் வேண்டும் இத் தொண்டு ஒன்றினையே தம் வாழ்வுப் பணியாகக் கொள்ள வேண்டும்.

# மதிப்புரை

திருநாவுக்கரசர் மாட்சி:– ஆசிரியர் புலவர் திரு. முருகவேள் B O L. தமிழாசிரியர், முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப் பள்ளி சென்னை 1·

பெரியார்களின் மாட்சி வாயிலாக உள்ளத்தை ஈர்த்து அவர்களது வரலாற்றினை யறியுமாறு வேட்கையை எழுப்புவது ஒரு நல்ல வழி. நூல் அவ்வழிச் சென்றுள்ளது மாணவருலகம், அறம், அமைதி, கலை, பண்பு முதலியவற்றைத் தன்னகத்தே கொண்ட செவ்விய சமய நிலையில் அசையா உள்ளத்தராக நின்று, சமயம் வேறு அரசியல் வேறு என்று எண்ணாமல் இன்ப வாழ்வு வாழவேண்டும் என்னும் நன்னோக்கம் நூலெங்கணும் பரந்து கிடக்கின்றது காலநிலையை யொட்டி மாணவர் உள்ளத்தி லெழும் ஐயங்களைப் போக்கும் விடைகள் தக்காங்கு பொதிந்துள்ளன நூல்மாணவர்க்குத் துணைப் பாடமாக வைக்கப் பெறின் வருங்கால உலகம் நலம் பல கனிந்து திகழும் என்பதில் ஐயமில்லை

ஆசிரியர் இது போன்ற நூல்களால் எதிர்கால உலகத்தினைப் பொன்னுலகாக்க முனைவார்களென நம்புகின்றோம்

---

இவ்வாறு ஒரு நூறு ஆன்றமைந்தடங்கிய [உயிர்த் தொண்டே உண்மைத் தொண்டு எனக் கொண்ட] பெரியோர்கள் நம் மருந் தமிழகத்தே சமயக் கொடி உயர்த்த முன்வரின் கேடொன்று மின்றி நாடெங்கும் வாழும் எனபதில ஐயமில்லை.

அறநெறி:– திங்களிதழ்; தனி இதழ் அணா 4. ஆண்டுக் கையொப்பம் ரூபா மூன்று. ஆசிரியர்:– தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்.

'அற நெறி' இதழ் என்றால், அது நாட்டுக்கு நலம் பல விளைப்பது என்றே பொருள்.

ஆசிரியர் ஒரு பரம்பரை மருத்துவர்; அறநெறி இதழின் மூலம் உடல் நலத்துக்கு மட்டுமன்றி உள்ளம், வாழ்வு முதலியவற்றிற்கும் வேண்டும்போது வேண்டும் மருந்து நல்கி உய்விப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தற்போதைய நாட்டுக்கு 'அற நெறி' தேவைப்படுவதே. இதழ் உலகில் நின்று வளர்ந்து வரத் திருவருள் உதவுக.

---

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்
ELEPHANT KISAN
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# கருவை இன்பம்

'நா. சுந்தரமூர்த்தி'

கருவை என்னும் தலம், பாண்டி நாட்டில் சங்கரநாயனூர் கோயிலுக்கு வடக்கே ஆறு கல் தொலைவில் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் செல்லும் வழியில் உள்ள ஒரு நல்ல சிவத் தலமாகும். இதுவே தற்போது கரிவலம்வந்தநல்லூர் என வழங்கப் படுகின்றது. குலசேகர பாண்டியன் என்னும் அரசன் வேட்டையாடச் சென்றபோது எதிர்ப்பட்ட ஓர் யானையைத் தாக்க அக் கரி சிவபெருமான் இலிங்க வடிவமாக எழுந்தருளியிருந்த புதரினை வலஞ் செய்து சிவகணமாகப் பெற்றமையால் 'கரிவலம்வந்தநல்லூர்' எனப் பெயர் பெற்றது. தஞ்சாவூர் தஞ்சையென மருவினாற் போல இவ்வூர் கருவையென மருவியது என்ப. சிவபெருமானது பெயர் பால்வண்ண நாதர், திருக்களாவீசர், மூகலிங்கர். அம்மை பெயர் ஒப்பனை. ஒப்பனையம்மையுடன் ஒப்பற்ற நிலையில் வியக்கத் தக்க வண்ணம் இலிங்க வடிவமாக அப்பன் இங்குக் கோயில் கொண்டுள்ளான். அவனைக் குறித்தே தன் துன்பத்தைப் போக்க உள்ளமும், ஊனும், என்பும் எல்லாம் குழைந்துருகத் திருக்கருவைப் 'பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் நூலினை அதிவீரராம பாண்டியன் அருளிச் செய்தான்.

அதிவீரராம பாண்டியனது காலம் கி-பி 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாதல் வேண்டும். (கி-பி 1564-1604) இவ்வந்தாதி வரகுணராம குலசேகர பாண்டியனால் பாடப்பட்டது என்பாரும் உளர். இது திருவாங்கூர் கல்வெட்டாராய்ச்சியினின்று அறியக் கிடக்கின்றது. (Travancore Archealogical Series Vol ins No VII Pages 115-133) இவனை அதிவீரராமனது தம்பி என்பாரும் உண்டு; தம்பி அல்ல என்பதும் சில செப்பேடுகளால் அறியக்கிடக்கின்றது.

'அந்தாதி' எனப்படுவது முன்னின்ற பாடலின் இறுதி எழுத்து, அசை, சீர் ஏதானும் ஒன்று பின்வரும் பாடலின் முதலாக வர, ஈறும் முதலும் மண்டலித்து முடியப் பாடும் ஒருவகைப் பிரபந்தம். சந்தவேறு பாட்டால் பத்து வகையான செய்யுளால் நூறு பாடல்கள் அந்தாதியாகத் தொடர அமைந்தவரின் அதுவே 'பதிற்றுப்பத்தந்தாதி' எனப்படும். திரு என்ற அடையடுத்துக் கருவையிலுள்ள பெம்மானைப் பாடியதால் 'திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி' எனப்பட்டது. இந்நூல் மிக்க சுவை கெழுமியது. சொல் வளம், பொருள் வளம் முதலிய கலைவளங்கள் பலவும் நிரம்பித் துளும்புவது. உள்ளத்தை உருக்கி உணர்வைக் கவருந் திறத்தது. நூலாசிரியர் பால்வண்ண நாதனைக் கண்ணாரக் கண்டு பேரானந்த மெய்திப் பத்திப் பரவசத்தால் ஒன்றி ஈடுபட்ட தன்மையினை இந்நூலுள் விரிவாகக் கூறுகின்றார். நலம் பல கனிந்து விளங்கும் இந்நூலுள் சென்று இன்ப மெய்தல் ஒவ்வொரு சைவரின் கடமையாகும்.

அதிவீரராமர் தமது அனுபவங்களையே பண் ஆர் இன் தமிழில் பகர்கின்றார். இவர் தம் இளமைக் காலத்தில் மெய்ந்நிலையில் இல்லாது பொய்யாக நடித்து நல்ல நாட்களை வீணாகக் கழித்ததாகவும் எம்பிரானின் திருப்பெயர்களை ஓதியதனால் தம் பழவினைத் தொடர்பு நீங்கியதாகவும் பிறவிப் பெருங்கடலை நீந்தி முத்திக் கரையினைச் சேர்வதற்கு இறைவனின் திருவடிகளையே புணையாகக் கொண்டு தம் கருத்தினை நிறைவேற்றிக் கொண்டதாகவும் மிக அழகுபடக் கூறுகின்றார். அவர்தம் அருள் வாக்குகளை எண்ணுந்தோறும் பயிலுந்தோறும் நந்தம் சைவ சமயக் கருத்துக்கள் அகத்தே அரும்பும். தாயுமானார், மணிமொழிப் பெம்மான், பட்டினத்தார் முதலியவர்கள் அவரது பாட்டில் உலவி வருவார். 'தூண்டல் செய்யா மணிவிளக்காக' விளங்கி ஞானசிரியனாகப் போந்து தன்னை ஏன்று கொண்டதாகவும் கூறுவது மாணிக்கவாசகரை நினைவூட்டுகின்றது. அல்லற் பிறவியினை அறுப்பவன் ஈசன் வேண்டுவார்க்கு வேண்டுவதேயளித்தும் வீட்டின்பத்தை அளிப்பவன் அவன் காண்டற்கரிய பேரொளியாகவும் தொழில் மூன்றியற்றும் கொல்லோனாகவும் களாவின் நிழற்கீழ்க் கனிவுடனிருப்பவன் என்றும் கருவைப் பெம்மான் இயல்புகளை எல்லாம் எடுத்தினிது கூறி இன்பத்திலாழ்த்துகின்றார்

கருவைப் பெம்மானைக் கண்ட அளவில் கண்கள் புனலைப் பாயும், களிப்பில் உள்ளம் கரையழிந்து ஓடும், அவனைப் பரவும் மொழியால் நாத் தடுமாறும்; மேனி சிலிர்க்கும்; சிவானந்தத் தெளிந்த நறவினைப் பருகித் தெவிட்டாது தெளிநிலையிலிருக்க அருள் பாலிக்கிறார் என்றெல்லாம் குழைந்து குழைந்து கூறு

கின்றார் நாம் உலகில் எப்பிறவி எடுப்பினும் வெய்ய நரகிடை வீழினும் அல்லது கண்டு மகிழத்தக்க சீரும் சிறப்பும் வாய்ந்த அரம்பையர் சூழ நிற்கக், கற்பக நிழற்கீழ் இருக்கப் பெறினும், கருவை இறைவனின் திருவடிக் கீழ்த் தங்கும் அருணிலைத் திறத்தினை அணியாகக் கொண்டிருத்தலே பேரின்பமாகும், அதுவே பிறவிப் பயனும் என, அன்பெனும் அழிவில்லாப் பொருளாம் இறைவனின் இயல்புகளை அறிவுறுத்துகின்றார் "எரிவாய் நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின்" என்ற வாதவூரடிகளின் வாய்மொழி இங்கு நினைவுகூரற்பாலது.

"வேண்டுவ தொன்று
தமியன் எப்பிறப்பும்
வெஞ்சழல் நரகிடை வீழினும்
காண்டகு சிறப்பின்
அரம்பையர் சூழக்
கற்பக நீழல் வைகிடினும்
தூண்டரு சுடரே!
களாநிழல் அமர்ந்த
சோதியே! கருவைநாயகனே!
ஆண்டகாய்! நினது
திருவடிக் கமலத்(து)
அன்பெனும் அழிவிலாப்
பொருளே"

என்றெல்லாம் அகங் கனிய அன்பினைக் குழைத்துத் தம் அருள்வாக்கினால் கவினுறக் கூறுகின்றார்.

மற்றோரிடத்தில் எப்பிரான் ஆடும்போது ஆகாயத்தால் சூழப்பட்டுள்ள அண்டகோளத்தின் நெடிய முகட்டிற்கு அப்புறத்தும் திருமுடி கடந்தது, பாதாள உலகு ஏழினுக்கப்பாலும் திருவடி சென்றது, திசை முடிவில் அக்கினியும் உடுக்கையும் அணிந்த திருக் கரங்கள் சென்றன, அவன் திருக்களா நீழலில் எழுந்தருளி யுள்ளவன், வெண்ணீறு துதைந்த பால் மேனியன், இத்தகைய கோலத்தோடு எம்மான் ஆடும் (உலகு வாழ உயிர் வாழ அருளும்) திருநடனச் சிறப்பினை,

"முடிகடந்தது
ககனகோளகைநெடு
முகட்டினுக் கப்பாலும்;
அடிகடந்தது
பாதலம் ஏழினுக்
கப்புறத் (து) அனலோடும்
துடிகள் தந்தகை
கடந்தன திகழ்ந்தமால்
தொல்புகழ்க் களாவீசன்
பொடிகள் தந்தபால்
மேனியன் திருநடம்
புகலுதற் கெளிதாமோ!"

என உள்ளங்கனிந்து உரைக்கின்றார்.

வையந்துயர்தீர அரன் நாமமே எங்குஞ் சூழ்க; அரனின் அருளைப் பெறின் செல்வம் பெறலாம், சிறப்புகள் பெறலாம், அல்லல் அகலும், அறிவு, கல்வி, நற்கதி எல்லாம் பெறலாம் என்று கூறி அனைவரையும் ஈசனைத் தலையாகக் கும்பிட்டு உளமார நினைந்து வாயார வாழ்த்த வலிந்து அழைக்கின்றார் ஆசிரியர். என்னே! அவர்தம் கருணைத் திறம்; ஆசிரியர் வேண்டுவதெல்லாம் பிறவாமையும் மீண்டும் பிறப்பு உண்டேல் இறைவனின் இணையடிகளை மறவாமையுமே யாம். மேலும், இறைவன் தம்மை ஏன்றுகொண்ட திறத்தினைக் கூறுவது எண்ணியெண்ணி இன்புறுதற் குரியது தம் மனத்தில் அதிசயத்தினைக் காட்டி, கவியால் போற்றி செய்யுமாறு நாவினைக் காட்டி, இடையறாத அன்பினைக் காட்டி, உள்ளத்தில் ஆனந்தக் களிப்பினையுங் காட்டி, வந்து ஆட்கொண்டான் எனப் படிப்போர் உள்ளக் கிழியில் இறைவனின் இணையிலா ஓவியத்தைத் தீட்டி ஓவாது எண்ணி எண்ணி என்பும் நெக்குருகுமாறு கூறுகின்றார்.

"அதிசய முளத்திற் காட்டி
அகம் புறந் தானுக் காட்டித்
துதிசெய்யக் கவிநாக் காட்டித்
தொடக்கறு நேயங் காட்டி
மதியினிற் களிப்புங் காட்டி
வந்தெனை யாண்டுகொண்டான்
கதியென வுலகம் போற்றக்
களாநிழ லமர்ந்த நாதன்"

ஆசிரியர் ஒரு பெரும் ஓவியப் புலவராகவும் கருதப்படுகிறார் இறைவனின் திருநடனத்தைக் கண்ணாரக் கண்டு அவனது ஆட்டத்தோடு அகத்தை ஒன்றுவித்து நடனச் சிறப்பினை உருவமாகத் தீட்டுவதை நோக்கின் ஆ! எவ்வளவு இன்பம் சூழ்கின்றது.

"வேதண்ட மேபுயங்கள்;
விண்ணே திருமேனி;
மூதண்ட கூடமே
மோலியாம் கோதண்டம்
ஒற்றை மாமேரு
உமாபதியார் நின்றாடப்
பற்றுமோ சிற்றம்பலம்"

பாக்களை நோக்குந்தோறும் நம் உள்ளத்தில் உவட்டாமல் இனிக்கும் தேன் பிலிற்றுந் தன்மை ஒளிர்கின்றது. பேரவியற்கை தந்து ஆராமை பயக்க வல்ல பாக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் திருநூலாம் 'திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி' யின் மூலமாக எம்பிரானின் புகழைப் பாடி அவனது பங்கயச் சேவடியினைச் சூடித் திகழ அடியார் திருக்கூட்டம் ஓதி ஓதிச் செந்தமிழ்ப் பயனைத் துய்ப்பது எவ்வளவு நலம் பயக்கும்!

சிவகருணையே வடிவாகிய இந்நூற் கடலுள் ஆன்மாக்கள் அழுந்தி மிதந்தால் பிறவிப் பயனைப் பெலாமன்றோ!

# உஷார்

**ஸ்ரீ திருப்புகழ்மணி**

கடவுள் காலத்தை ஸ்ருஷ்டி செய்தார். மானிடரை அதற்குள் புகட்டி விட்டார். தான் காலத்துள் மறைந்து அதனுள்ளே கிடக்கின்றாராம். காலத்தைக் கடந்து உள் சென்றால் கடவுள் கண்படுவார். கண்ணாம்பூச்சி விளையாட்டு. மானிடா! கடவுளைக் கண்டுபிடி! உனக்கு ஒரு எத்து சொல்லுகிறேன். கடவுளை நீ காலத்தில் புகட்டிவிடு. முப்போதும் எப்போதும் 'முருகா' என்றும், அல்லது உனக்குகந்த திருநாமத்தால், ஒப்பற்ற கடவுளை ஒவ்வொரு நிமிஷத்திலும் உன் கால உணர்ச்சியில் புகட்டி நின்றால் உத்தம வத்துவான ஜோதி உன் உள்ளத்துள்ளே ஒளிரும். இது பெரியோர்களின் அனுபூதியாகும். இவ்விதம் காலத்தை வென்ற இடம்தான் இராப்பகல் அற்ற விடம்.

காலத்தின் இயல்புதான் என்னே! ஒரு குடத்தில் ஜலத்தைவிட்டு, அதை நன்றாகச் சுழட்டிவிட்டால் குடம் இருந்த இடத்தில் சும்மாவிருக்க, குடத்திற்குள் ஜலமானது எப்படிச் சுழலுமோ, அதுபோல கடவுள் எனும் பாத்திரத்திலே அருள் எனும் ஜலம் சுழன்று வரும் நிகழ்ச்சியே காலம். குடத்தில் சுழலும் தண்ணீர் தன் வேகத்தால் குமிழிகள், நுரை, முதலியவைகளை உண்டாக்கிக் கொள்வதுபோல், கடவுள் என்னும் குடத்துள் சுழலும் அருள் வெள்ளம் வையகம் என்றும், பதினான்கு உலகங்கள் என்றும், இயற்கையென்றும் விந்தாடவியான நிகழ்ச்சிகளை விளைவித்துக் கொள்கின்றது. இந்த விசித்திரத்தைப் பார்த்து புத்தி மயங்காமல் அறிவினால் அருளின் இயக்கம், அன்பின் ஆற்றல் என்று உணர்ந்த முனிவர்கள் சுழலிலிருந்தும் சுழலைத்தாண்டி நிற்பர், அருளில் நிற்பர், பரமாய் இருப்பர். ஆக்கலும், நிலைநிறுத்தலும், அழித்தலும் சுழலின் தன்மை. சுழலோ அருள் வெள்ளம்; பரம்.

காலம் என்ற தத்துவம்தான் என்னே? ஒரு உணர்ச்சி ஒரு நிமிஷத்தை நாம் உணருங்கால் அது நமது உணர்ச்சியில் பிறந்து இறந்துவிடுகின்றது. ஒரு நிமிஷம்போல்தான் ஒரு ஆயுள், ஒரு யுகம், பிறப்பும் இறப்பும் கூடும் இடந்தான் காலம் என்று சொல்லலாம். பிறந்த நிகழ்ச்சி இறப்பதும், இறந்த நிகழ்ச்சி கர்ப்பமாய் எதிர்ந்து வருவதும், எதிர்ந்து வரும் அனுபவம் மறுபடியும் நிகழ்வதும் காலத்தின் தன்மை. மனம், சுடுகாட்டிற்குப் போகும் பிணங்களை எண்ணுகின்றது ஒரு பால். மற்றொரு பால் பிறக்கும் ப்ரஜைகளை எண்ணுகிறது. இந்த பிறப்பிறப்பு கணக்கை (Birth & Death Register) நீத்த மனம் யோகியர் மனம். அவர்கள் சிவயோகிகள் என்றும், காலத்தை வென்றிருப்பார்கள் என்றும் அருணகிரியார் உபதேசிக்கின்றார்.

— 'குங்குமம்'

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

**முல்லைக் கொடி**

(குருதலக் கிழமை வெளியீடு)

புதிய ஆண்டு, இக்கலைகள் விழாவிலிருந்து தொடங்குகின்றது.

7-ம் கிளை - முதல் தளிர்

8-10-54 வெள்ளிக் கிழமையிலிருந்து வெளிவரும்.

நேயர்கள், தமது புத்தாண்டுக் கையொப்பத்தைப் புதுப்பித்துக் கொள்வார்களாக!

—கண்காணிப்பாளர்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)